[1987 ஏப்ரல் 23

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரமங்கலம் பேரூராட்சியானது கிட்டத்தட்ட 30,000 மக்கள் வசிக்கக்கூடிய மையப் பகுதியாக இருப்பதால், கீர மங்கலத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான நிலமும் கையகப் படுத்தப்பட்டு, அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கீர மங்கலத்தை டவுனாக அறிவிக்கக்கூடிய அந்தஸ்து இல்லையென்ற ஒரே ஒரு காரணத்திற்காக, நம்முடைய அரசு அதை இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, நிலமும் கையகப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தாலும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிற காரணத்தாலும் நம்முடைய அரசு கீர மங்கலம் பேரூராட்சியை டவுன் அந்தஸ்துக்கு உயர்த்தி, பேருந்து நிலையம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுமார் ரூ. 1.40 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் கட்ட 27-10-1986 அன்று தீர்மானித்திருக்கின்றனர். அரசிடம் அந்த நிதியைக் கடனாக அவர்கள் கோரவிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து இதுவரையில் எந்தத் தகவலும் வரவில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சி மன்றத்திடமிருந்து அதற்குரிய பரிந்துரையும், அதற்குரிய தீர்மானமும் அனுப்பப்பட்டதற்குப் பிறகாவது இந்தக் கீரமங்கலம் பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அனுப்பப்பட்டபிறகு ஆய்ந்து அரசு முடிவெடுக்கும்.

ஆற்காடு ஒன்றியம், மேலகுப்பம் மற்றும் குக்குண்டி பஞ்சாயத்துக்களைப் பிரித்தல்

381—(*வினா எண் 8862)—திரு. த. பழனி; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு ஒன்றியம், மேலகுப்பம், குக்குண்டி ஆகிய பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

1987 ஏப்ரல் 23]

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு ஒன்றியத்தில் இருக்கிற மேலகுப்பம் மலைமேல் இருக்கிற கிராமம் ஆகும். அதனுடைய துணை கிராமங்களாக 7 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 7 துணை கிராமங்களையும் இணைக்கின்ற சாலைகள் அந்தப் பஞ்சாயத்தோடு சேர்ந்திருக்கின்ற நிலையிலே இல்லை. ஏறக்குறைய 2,000 மக்களுக்கு மேலாக இருக்கிற கிராமமாக இருப்பதாலும் மலைமேல் இருக்கிற கிராமமாக இருப்பதாலும் பல்வேறு வசதிகளையும் வாய்ப்புகளையும் ஒருங்கிணைக்கிற சூழ்நிலையை உருவாக்குவதற்கு அந்த மேலகுப்பம் கிராமம் பிரித்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மேற்கொண்டு ஊராட்சிகளை அவசியம் பிரிக்கவேண்டுமென்ற செயற்குறிப்பு பெறப்பட்டால் நிர்வாகக் காரணங்கள், நிதி வசதி, இவற்றைக் கருத்தில் கொண்டு, ஊராட்சிகளைப் பிரிப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் மாவட்ட டி.டி.சி. மீட்டிங்கிலேயும் கூறி இதுபோன்ற பிரச்சினைகளை எழுப்பி அங்கே தீர்மானமே நிறைவேற்றி வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அரசிடத்திலேயிருந்து அதுபோன்ற செயற்குறிப்பு வருமேயானால் அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்று ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரே நடவடிக்கை எடுக்கலாம். இருப்பினும் அரசு அதுகுறித்த தகவல்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற முயற்சிக்கும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை வருவாய் மற்றும் ஜனத்தொகைக் கணக்கெடுப்பு 10,15 ஆண்டுகளுக்கு முந்தைய கணக்கின்படி உருவாக்கப்பட்டன. இப்பொழுது பெரிய, பெரிய ஊராட்சிகளாகவும் ஜனத்தொகை அதிகமாகவும் ஆகியிருக்கிற காரணத்தால், நிர்வாகம் செய்வதற்குச் சிரமமாக இருக்கிறது. அந்தக் கருத்தில் கொண்டு, அரசு ஒரு தனிப்பட்ட குழுவை நியமித்து, மாநிலம் முழுவதும் இருக்கிற ஊராட்சிகளை நிர்வாக வசதியை விரைவுபடுத்துவதற்கு உதவியாக, பிரித்துக் கொடுக்க தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே அந்த விவரம் இல்லை. இது ஆற்காடு ஒன்றியத்தைப் பற்றி கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருப்பதைப் பற்றிய தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தரலாம்.

இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதி

382—(*வினா எண் 10056) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்குவதாக அரசு அறிவித்த ரூ. 200/- இன்னும் அத்தொழிலாளர்களுக்குக் கிடைக்காததால் உடனடியாக அந்த நிவாரணத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து தலைக்கு ரூ. 200/- வீதம் 498 தொழிலாளர்களில் 484 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவலுக்கு நன்றி. நான் கொடுத்த கேள்வி சற்று முன்பாக வந்தது. பலருக்கும் கிடைக்காதது பற்றியதாகும். பாக்கியுள்ளவர்களுக்குக் கிடைப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பதைத் கணக்கிலே எடுத்துக்கொண்டு மீண்டும் அவர்களுக்கு ஒரு தொகையை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான பரிகாரம், முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அவ்வப்போது கொடுத்துக் கொண்டிருப்பது அல்ல. இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதில்தான் உண்மையான பரிகாரம் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை மூடியதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.